HOLY TRINITY INTERNATIONAL SCHOOL

Melpalai, Edaicode P O, K K Dist.

8.5.2020

Dear Parents,

Herewith, we send the Tamil lessons of the questions and answers we sent you on 5.5.2020. Kindly ask the students to club these lessons with those questions and answers and to practice and study well.

With regards ,

HTIS.

இயல் ஒன்று

மொழி

**கற்றல் நோக்கங்கள்**

- செய்யுளைப் பிழையின்றிச் சரியான ஒலிப்புடன் படித்தல்.
- தன் கருத்தைக் கவிதை மூலம் வெளிப்படுத்த முயலுதல்.
- இரண்டு கருத்துகளை ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் பேசும் திறன் பெறுதல்
- மரபு என்பதன் பொருளை உணர்ந்து போற்றுதல்.
- மரபின் பல்வேறு வகைகளை அறிந்து பயன்படுத்துதல்

723KLE



பாடல்

# தமிழின் இனிமை!

கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சும்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் – தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

– பாரதிதாசன்

## சொல்பொருள்

| | | | |
|---|---|---|---|
| கனி – | பழம் | கழை – | கரும்ப |
| நனி – | மிகுதி | நல்கிய– | வழங்கி |

## பாடல் பொருள்

கனியின் சுளையில் உள்ள சுவையும், முற்றிய கரும்புச் சாற்றின் மலரிலிருந்து எடுக்கப்பட்ட தேனின் சுவையும், காய்ச்சிய பாகின் சுவை பசு தந்த பாலின் சுவையும், தென்னை மரத்திலிருந்து பெறப்பட்ட குளிர்ந்த சுவையும் இனிமையானவை. ஆனால், தமிழ் இத்தகைய சுவைக உயர்ந்தது. தமிழோ என் உயிர் போன்றது என்கிறார் பாரதிதாசன்.

## நூல் குறிப்பு

இப்பாடலைப் பாடியவர் பாரதிதாசன். புதுச்சேரியில் பிறந்த இவர், பாரதி கொண்ட பற்றினால், கனக சுப்பு ரத்தினம் என்ற தம் இயற்பெயரைப் பா என மாற்றி அமைத்துக்கொண்டார். இவர் பாடிய இப்பாடல், பாரதிதாசன் கவிதைகள் என்னும் நூலின் முதல் தொகுப்பில், தமிழின் இனிமை என் தலைப்பில் அமைந்துள்ளது.

## கற்பவை கற்றபின்

- பாடலைச் சரியான உச்சரிப்புடன் படித்துக் காட்டுக.
- பாடலை உரிய ஓசையுடன் பாடுக.
- பாரதிதாசன் தமிழை உயிர் என்கிறார். உங்களுக்குத் தமிழ் எது போன்றது? கலந்துரையாடுக.
- மொழி தொடர்பான பாடல்கள் மற்றும் கவிதைகளைப் படித்து மகிழ்க

மதிப்பீடு

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. **சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. 'கழை' இச்சொல் உணர்த்தும் சரியான பொருள் ____________

அ) கரும்பு ஆ) கறும்பு

இ) கருப்பு ஈ) கறுப்பு

2. கனியிடை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............

அ) கனி + யிடை ஆ) கணி + யிடை

இ) கனி + இடை ஈ) கணி + இடை

3. பனி + மலர் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..............

அ) பனிம்மலர் ஆ) பனிமலர்

இ) பன்மலர் ஈ) பணிமலர்

ஆ. **கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

அ) கழையிடை – ________ + ________

ஆ) என்னுயிர் – ________ + ________

இ. **பெட்டியிலுள்ள சொற்களைப் பொருத்தி மகிழ்க.**

1. பால் – ______ 2. சாறு – ______

3. இளநீர் – ______ 4. பாகு – ______

கரும்பு
வெல்லம்
பசு
தென்னை

ஈ. **இப்பாடலில்வரும்ஒரேஓசையுடையசொற்களைஎடுத்துஎழுதுக** ____________

உ. **பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் உள்ள சொற்களை எடுத்து எழுதுக**

________ ________

ஊ **பாடலில் வரும் வருணனைச் சொற்களை எடுத்து எழுதுக.** ____________


எ வினாக்களுக்கு விடையளிக்க.

1. பாரதிதாசன் எவற்றையெல்லாம் இனியன என்று கூறுகிறார்?

2. பாரதிதாசன் எதனை என் உயிர் என்று கூறுகிறார்?

ஏ) சிந்தனை வினா

பாரதிதாசன் சிலவற்றை இனியன என்று கூறுகிறார்.
உனக்கு எவையெல்லாம் இனிமையானவை? ஏன்?




## கவிதைப் பட்டிமன்றத்துக்கான அறிமுகம்

பேசுதல் என்பது அடிப்படைத்திறன் எனில், பேச்சாற்றல் என்பது உயர்நி பேசுதலின் வளர்நிலையே பேச்சாற்றல். அத்தகைய பேச்சாற்றல் திறனை வளர்க்கு ஒன்று, இக்கவிதைப் பட்டிமன்றம்.

பலர் நிறைந்த அவையினிலே தாம் இயற்றிய கவிதையை வெளியிட்டபோது 11 வயதுதான். ஆதலால், கவி பாடும் திறமையை இளமையிலேயே வளர் சாலச் சிறந்தது. இங்கு உரைநடைப் பாடமாக அமைந்துள்ள இப்பகுதி, இலக் வடிவமான கவிதை நடையில் அமைந்துள்ளமை, புதுமையின் நுழைவாயில். சொல்லாடல், உவமைச்சிறப்பு, மோனை, எதுகை போன்ற நயங்கள் மேலும் சிறப்புடையதாக்குகின்றன. மாணவர்கள், குரல் ஏற்றஇறக்கத்தோடும் தங் வாய்விட்டுப் படிக்கும்போதுதான் இக்கவிதைப் பட்டிமன்றப் பேச்சு, ஆ பேச்சுக்கலையாக மிளிரும். அதற்கான வாய்ப்பை ஆசிரியர்கள் ஏற்படுத்தித் தரவே

இடம் : பள்ளிவளாகம் காலம் : பிற்பகல் 3. 00 மணி

உறுப்பினர்கள் : நடுவராகச் சிறப்பு விருந்தினர், ஐந்தாம் வகுப்பு மாணவர்க அருளப்பன், மதியொளி, சலீமா.

நடுவர் : செந்தமிழே ! நறுந்தேனே !
செகம் போற்றும் செம்மொழியே !
முத்தமிழ் சொல்லெடுத்து
நற்றமிழ்ப் பட்டி மண்டபத்தின்
நடுவராக நான் வந்துள்ளேன்.
வணக்கம்
தித்திக்கும் தேன்தமிழில்
எத்திக்கும் புகழ்பரப்பும்
வித்தகக் கவிதையால்,
பெரிதும் தேவை அறிவா? பண்பா?
என, பா பாட வருகின்றனர்
பாராட்டுக்குரிய நால்வர்,
தனித்துவமிக்க இன்சுவை,
சொல்லழகி சலீமா
அருமையான அருளப்பன்
ஒப்பற்ற மதியொளி.....
முதல் கவிதை முத்தாய்ப் பாட
இனிதே அழைக்கின்றேன் இன்சுவையை......

இன்சுவை : புவி காக்கும் தமிழ்த் தாய்க்கும்
கவியரங்கத் தலைமைக்கும்
ஆன்றோருக்கும் சான்றோருக்கும்
அறிவுதான் முன்னேற்றத்தின்
ஆணிவேர் என்றே
அடித்துக் கூற வந்துள்ளேன்
'அக்னி' தந்த அப்துல்கலாம்
அசத்தியதும் அறிவாலே! அறிவாலே!
அறிவின் துணை கொண்டே
ஆயிரம் கண்டுபிடிப்பால் தாமஸ்
ஆல்வா எடிசனும் வாழ்கின்றார் அறிவாலே!
அறிவுமிகு மனிதனாக
அகிலத்தில் உயர்ந்து நின்றால்
அத்தனையும் நம் கையில்
என்று கூறி விடை பெறுகின்றேன்........

நடுவர் : இன்சுவையின் கவிதை
அறிவாயுதம்.......
அடுத்து, ஒளிரும் கவிதையுடன்
மதியொளி கவிபாட வருகின்றார்

மதியொளி : அகிலமெல்லாம் தமிழே மணக்கும்!
பண்புதான் வெற்றிப்படி என்றே
பறை சாற்ற வந்துள்ளேன்.
நற்பண்பு தூக்கிவிடும்
நம்மை உயரத்திலே
நற்பண்பு புகுந்து விட்டால்
நாவினிலே இனிமை வரும்
பண்பாலே சிறந்தவர் தாம்
பலருண்டு நம்மிடையே
புத்தரோடு வள்ளுவரும்
போதித்ததும் நற்பண்பே.....
நன்னெறியால் நிலைத்து
நிற்போம் உலகினிலே....

நடுவர் : மிளிர்கின்ற தமிழ்க் கவிதை
மதியொளியின் அரும் கவிதை....
அறிவாற்றல் பயன் பேச
அருளப்பன் வருகின்றார்
செறிவாற்றல் கவிதையொன்றைச்
செப்பிடவே வருகின்றார்.

அருளப்பன் : அறிவாற்றல் உள்ளவன்தான்
ஆளுகின்றான் அண்டத்தை
வெறும் பண்பை வைத்துக்கொண்டு
பெரும் பந்தல் போடலாமோ?
கூறும் பண்பில் நம்
வயிறும் நிறைந்திடுமோ?
நல்லவன் இருந்தால்
நாடென்ன முன்னேறுமோ?
வல்லவன் வகுத்ததன்றோ
வளமான இவ்வுலகு.....
தூண் போன்ற அறிவேதான்
வான் முகத்தைத் தொட்டிடுமே!.......

நடுவர் : பண்பின் பெருஞ்சிறப்பைப்
பொழிந்திடவே வருகின்றார்
சொல்லழகி சலீமா......

சலீமா : பண்பிலான் பெற்ற செல்வம்
பயனில்லை உலகோர்க்கே
பண்பேதான் அன்பை நல்கும்
பன்மடங்கு உயர்வைத் தரும்
உண்மை சொன்னேன் யாவர்க்கும்
அன்பின் மிகுதியால் அதியமான்
உயிர் காக்கும் நெல்லிக்கனியை
உவந்தளித்தான் ஔவைக்கு
அத்தனையும் எளியோர்க்கு
அன்னை தெரசா பெற்றுத் தந்தார்
குணமென்னும் நற்பண்பே
குன்றிலிட்ட விளக்கன்றோ......

நடுவர் : எல்லோரும் சிறப்பாக
நல்லோரே போற்றும் வண்ணம்
நற்கவிதை வாசித்தார்கள்......
என்னுடைய தீர்ப்பிற்கு
இசைந்தே தான் வருகின்றேன்.....
கண்ணுக்கு இருவிழி
கல்வியின் நேர்விழி
அறிவும் பண்பும்
சமமாக வைத்தேதான்
உறு புகழ் பெறுவோமே......
பொறி ஐந்தும் பண்பாகப்
பார் முழுவதும் அறிவாக
வலம் வருவோம் நாமே
உளம் நிறை வாழ்த்தோடு
நலம் இரண்டும் தானென்று
நல்ல தீர்ப்பு கூறி
நானும் விடைபெறுகின்றேன்.....
நன்றி வணக்கம்!

## கற்பவை கற்றபின்

- அறிவு, பண்பு – இவற்றில் எது சிறந்தது என நீ கருதுகிறாய்?
- 'அறிவுதான் முன்னேற்றத்தின் ஆணிவேர்' – இது பற்றி உன் கரு
- நாட்டின் [ஊரின், வீட்டின்] வளர்ச்சியில் பெரும்பங்கு வகிப்பவர்க நல்லவர்களா? வல்லவர்களா? வகுப்பறையில் சொற்போர் நிகழ்

## படித்து அறிக

### இலக்கிய மன்றத் தொடக்க விழா

**நிகழ்ச்சி நிரல்**

- தமிழ்த்தாய் வாழ்த்து
- வரவேற்புரை : க.காவியா, ஐந்தாம் வகுப்பு
- தலைமை உரை : தலைமையாசிரியர்
  ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி,
  அரியலூர்.
- சிறப்பு உரை : சிறப்பு விருந்தினர்
  முனைவர். இரா. அன்பழகன்
  மாவட்ட இயக்குநர், தமிழ் வளர்ச்சித்
- நன்றி உரை : செ. முத்து நிலவன், நான்காம் வகுப்
- நாட்டுப் பண்

## மதிப்பீடு

### படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோ

அ. **சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. நற்றமிழ் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............................

   அ) நல் + தமிழ்    ஆ) நற் + றமிழ்

   இ) நன்மை + தமிழ்    ஈ) நல்ல + தமிழ்

2. 'உலகம்' என்னும் பொருளைக் குறிக்காத சொல் ..............................

   அ) வானம்    ஆ) அண்டம்    இ) செகம்

3. அறிவு + ஆயுதம் என்பதை சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..........

   அ) அறவாயுதம்    ஆ) அறிவாயுதம்

   இ) அறிவு ஆயுதம்    ஈ) அறிவாய்தம்

4. புகழ் இச்சொல்லின் எதிர்ச்சொல் ...............................

அ) இகழ் ஆ) மகிழ் இ) திகழ் ஈ) சிமிழ்

5. வெளிச்சம் – இச்சொல்லைக் குறிக்காத சொல் ...............................

அ) ஒளி ஆ) தெளிவு இ) விளக்கு ஈ) இருள்

## ஆ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

அ) செந்தமிழ் – ---------- + ----------

ஆ) கவியரங்கம் – ---------- + ----------

## இ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. அறிவால் உயர்ந்தவர்களாக இன்சுவை யார் யாரைக் குறிப்பிடுகிறார்?
2. பண்பால் சிறந்தவர்களாக மதியொளி எவரையெல்லாம் குறிப்பிடுகிறார்?
3. உயிர் காக்கும் நெல்லிக்கனியை யார், யாருக்குக் கொடுத்தார்?
4. நடுவர் கூறிய தீர்ப்பை உன் சொந்த நடையில் கூறுக.
5. ஐம்பொறிகளுள் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற நான்கையும் எழுதுக.
   கண், ------------, ------------, ------------, ------------.
6. தமிழைச் சிறப்பிக்கும் பெயர்களைப் பாடப்பகுதியிலிருந்து எடுத்தெழுதுக.

## ஈ. சிந்தனை வினாக்கள்

1. கல்வி, செல்வம், வீரம் இவற்றுள் எது சிறந்தது என நீ கருதுகிறாய்? ஏன்?
2. "வெறும் பண்பை வைத்துக்கொண்டு பெரும் பந்தல் போடலாமா?"
   இத்தொடருக்கான பொருளை உம் சொந்தநடையில் வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.




அன்று ஞாயிற்றுக் பள்ளிக்கு விடுமுறை செழியன் தன் ஆடுகளை மேய்ச்சலுக் சென்றான்.

ஆடுகள் காட்டின் மேய்ந்து கொண் செழியன் ஒரு மரத்தடியி காட்டின் அழகை கொண்டிருந்தான். அ மேலிருந்த குரங்குகளி அலப்பறை ஓசை எரிச்சலாக இருந்தது. அதனால், அவன் வேறு ஒரு மரத்தடிக்குச் சென்று அங்கிருந்த மரங்களில் அணில்கள் ஓடிப் பிடித்து விளையாடின. அம்மர குயில் ஒன்று குக்கூ குக்கூ ..... எனக் கூவியது. குயிலின் ஓசை செழியனி இனிமையாக இருந்தது. அப்படியே படுத்துச் சிறிது நேரம் ஓய்வெடுத்தா ஆடுகள் மே.....மே......எனக் கத்தும் சத்தம் கேட்கவே, செழியன் பதற்றத்து என்னவென்று கவனித்தான். அருகில் பச்சைப் புதருகே நரி ஒன்று கொன்று தின்ன, நேரம் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான். உ குச்சியை வளைத்து வில்லாக்கி நரியை நோக்கி அம்பை எய்தான். காயமடைந்த நரி ஊளையிட்டுக் கொண்டே ஓடி விட்டது.

செழியன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு பாட்டியுடன் வீட்டிற்குக் கி தூரத்தில் எங்கோ சிங்கம் முழங்கும் சத்தம் கேட்டது. அந்தச் கேட்டவுடன் காடே பரபரப்பாகி விட்டது. பறவைகள் இறக்கைகளைப் அடித்துக் கொண்டு இங்குமங்கும் பறந்தன. யானை பிளிறியது; ஆந்தை கீரிப்பிள்ளையும் செடிகளின் மறைவிலிருந்து ஓடியது மயில் அகவியது; பாம்பும் தன் புற்றிலிருந்து வெளியே வந்து சீறியது; குதிரை கனைத்தது. இவற்றை எல்லாம் கேட்ட செழியனுக்குப் பயத்தால் நாக்கு வறண்டது. தான் வைத்திருந்த தண்ணீரைக் குடித்தான். பாட்டியுடன் வீட்டிற்குச் செல்லும் வழியில் கம்பங்கொல்லையில் வண்டுகள் முரலும் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. ஊருக்கு அருகே






வந்த பிறகுதான் செழியனுக்குப் பயம் சற்றுக் குறைந்தது. செழியன் தன்னுடைய வீட்டிற்குள் நுழைந்ததுமே அவனைக் கண்ட மகிழ்ச்சியில் தொழுவத்திலிருந்த பசு கத்தியது. செழியன் ஆடுகளைப் ஆட்டுப்பட்டியில் விட்டுத் தன் அம்மாவிடம் சென்று, காட்டில் தான் கண்ட நரியைப் பற்றியும் சிங்கம், யானை இவற்றின் சத்தத்தைப் பற்றியும் மிகுந்த பரபரப்போடு கூறினான். அம்மா செழியனின் துணிவைப் பாராட்டினார்.

வாழைத் தோட்டத்திலிருந்த தண்ணீர்த் தொட்டியில் செழியன் குளித்துவிட்டு வந்தான். அம்மா கொடுத்த முறுக்கைத் தின்றான். அப்போது தங்கை பூவிழி பால் பருகிக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, செழியனையையும் , பூவிழியையும், பாட்டியையும் சாப்பிட வாருங்கள் என்று அம்மா அழைத்தார். அம்மாவின் குரலைக் கேட்டதும் இருவரும் சென்று கொடுத்த உணவை உண்டனர்.



பின்னர், தூங்கப் போகும் முன் பாட்டி கதை கூறினார். இருவரும் கதையை ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். எலியும் எலிக் குஞ்சும் கீச் ....கீச் ..... என்று சத்தமிட்டன.

எலியின் இந்த சத்தம், பாட்டியின் கதைக்குப்பின்னணிசேர்ப்பதுபோல்

இருந்தது.நாய் குரைக்கும் சத்தத்தைக் கேட்டு வெளியே வந்து பார்த் பூனை ஒன்று சீறுவதைக் கண்டு நாய் குரைத்த காரணம் அறிந்தான் அருகிலிருந்த தென்னந் தோப்பின் பக்கம் விரட்டிவிட்டு வீட்டிற்கு கொண்டான். பாட்டியும், தங்கையும் முன்பே தூங்கிவிட்டனர்.

கொய்யாத் தோப்பிலிருந்த மரத்தின் மேலிருந்து கொக் கொக்கரக்கோ ......என சேவல் ஒன்று கூவும் ஓசையைக் கேட்டுக் கண் செழியன்.

கா.....கா...... எனக் காகமும் தன் பங்குக்குக் கரைந்தது.

செழியன் உற்சாகமாகத் துள்ளியெழுந்து அன்றைய நாளின் மகிழ்ச்சியாகச் செய்ய ஆரம்பித்தான். தன் அனுபவங்களைத் தன் ந பகிரப் போகும் ஆவலுடன் பள்ளிக்குக் கிளம்பிச் சென்றான்.

பறவைகள், விலங்குகள் முதலான உயிரினங்களின் ஒலிக முறைகளையும் இவ்வாறு கூற வேண்டுமென முன்னோர் கூறி தொன்று தொட்டுப் பின்பற்றி வருகிறோம்.

## கற்பவை கற்றபின்

- 'என்ன சத்தம்' என்ற பகுதியைச் சரியான உச்சரிப்புடன் நிறுத்தக் ஏற்பப் படித்துக் காட்டுக.
- செழியனின் செயல்கள்பற்றி உங்களுடைய கருத்து என்ன? குழு கொள்க.
- ஞாயிறு விடுமுறையில் நீங்கள் என்ன செய்தீர்கள்? வகுப்பறையி கொள்க.
- உமக்குத் தெரிந்த கதை ஒன்றை வகுப்பறையில் கூறுக.
- இப்பாடப்பகுதிக்கு ஏற்ற தலைப்பினைக் குழுவில் கலந்துரையாடு

## மதிப்பீடு

### வினாக்களுக்கு விடையளிக்க.

1. செழியன் ஆடுகளைக் காட்டிற்கு ஓட்டிச் செல்லக் காரணம் எ
2. செழியன் செய்தவற்றை உமது சொந்த நடையில் கூறுக.

### சிந்தனை வினா.

1. நம்மைப்போல் விலங்குகளுக்கும் பேசும் திறன் கிடை இருக்கும்? காட்டில் வாழும் விலங்குகள் பேசுவதுபோல் ஓ எழுதிக்காட்டுக.
2. நீங்கள் செல்லமாக வளர்க்கும் நாய், பூனை போன்ற விலங் ஆபத்து நேர்வதற்கு முன்பு ஏன் ஒலியெழுப்புகிறது என எப்பொ சிந்தித்ததுண்டா?

## மரபுச் சொற்கள்

நம் முன்னோர்கள் எப்பொருளை எச்சொல்லால் எவ்வாறு வழங்கினார்களோ, அப்பொருளை அச்சொல்லால் அவ்வாறே வழங்குவது மரபு.

### ஒலி மரபுச் சொற்கள்

குரங்கு அலப்பும்
குயில் கூவும்
ஆடு கத்தும்
சிங்கம் கர்ச்சிக்கும், முழங்கும்
நாய் குரைக்கும்
புலி உறுமும்
யானை பிளிறும்
ஆந்தை அலறும்
மயில் அகவும்
பாம்பு சீறும்

### விலங்குகளின் இளமைப்பெயர் மரபுச் சொற்கள்

ஆட்டுக் குட்டி
கோழிக் குஞ்சு
குதிரைக் குட்டி
குரங்குக் குட்டி
மான் கன்று
யானைக் கன்று
சிங்கக் குருளை
புலிப் பறழ்
கீரிப் பிள்ளை
அணிற்பிள்ளை

### வினைமரபுச் சொற்கள்

அம்பு எய்தார்
ஆடை நெய்தார்
பூ பறித்தாள்
மாத்திரை விழுங்கினான்
நீர் குடித்தான்
சோறு உண்டான்
கூடை முடைந்தார்
சுவர் எழுப்பினார்
முறுக்கு தின்றாள்
பால் பருகினான்

### தாவரங்களின் உறுப்புப்பெயர் மரபுச் சொற்கள்

| | |
|---|---|
| மா, பலா, வாழை | இலை |
| ஈச்சம், தென்னை, பனை | ஓலை |
| கம்பு, கேழ்வரகு, சோளம் | தட்டை |
| நெல், புல், தினை | தாள் |
| அவரை, கத்தரி, முருங்கை, வெள்ளரி | பிஞ்சு |

### பூச்சிகள், பறவைகள், விலங்குகள் – இருப்பிட மரபுச் சொ

| | |
|---|---|
| கரையான் புற்று | ஆட்டுப் பட்டி |
| மாட்டுத் தொழுவம் | குதிரைக் கொ |
| கோழிப் பண்ணை | குருவிக் கூடு |
| சிலந்தி வலை | எலி வளை |
| நண்டு வளை | யானைக்கூடம் |

## கற்பவை கற்றபின்

- மரபு பற்றி நீ அறிந்து கொண்டதை உனது சொந்த நடையில் கூ
- நாம் ஏன் மரபினைப் பின்பற்ற வேண்டும்? பின்பற்றவில்லையெ என்னவாகும்? வகுப்பறையில் கலந்துரையாடுக.

## மதிப்பீடு

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவே

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. நம் முன்னோர்கள் ஒரு சொல்லை சொல்லியவாறே நாமும் செ ____________

   அ) பழைமை ஆ) புதுமை இ) மரபு ஈ) சிறப்

2. யானை ____________

   அ) கத்தும் ஆ) பிளிறும் இ) கூவும்

3. 'ஆந்தை அலறும்' – என்பது __________

அ) ஒலிமரபு
ஆ) வினைமரபு
இ) இளமைப் பெயர் மரபு
ஈ) இருப்பிடப் பெயர் மரபு

4. புலியின் இளமைப் பெயர் __________

அ) புலிப்பறழ்
ஆ) புலிக்குட்டி
இ) புலிக்கன்று
ஈ) புலிப்பிள்ளை

5. 'பூப்பறித்தாள்' என்பது __________

அ) வினைமரபு
ஆ) பெயர் மரபு
இ) ஒலி மரபு
ஈ) இளமைப் பெயர் மரபு

**ஆ. ஒலி மரபுகளைப் பொருத்துக.**

1. சிங்கம் – கூவும்
2. அணில் – அலப்பும்
3. மயில் – முழங்கும்
4. குயில் – கீச்சிடும்
5. குரங்கு – அகவும்

**இ. உயிரினங்களின் படங்களுக்கு உரிய ஒலிமரபை வட்டமிடுக.**

1. மயில்  – கூவும், அகவும், பிளிறும், கத்தும்
2. கிளி  – அலப்பும், பேசும், கூவும், கீச்சிடும்
3. குரங்கு  – அகவும், கீச்சிடும், சீறும், அலப்பும்
4. ஆடு  – பேசும், கத்தும், பிளிறும், கூவும்
5. குயில்  – அலப்பும், பிளிறும், அகவும், கூவும்
6. யானை  – கத்தும், கர்ச்சிக்கும், உறுமும், பிளிறும்

ஈ. **வினை மரபுகளைப் பொருத்துக.**

| | |
|---|---|
| 1 நீர் | பறித்தாள் |
| 2 முறுக்கு | எய்தான் |
| 3 உணவு | குடித்தான் |
| 4 அம்பு | தின்றான் |
| 5 பூ | உண்டான் |

உ. **ஒலிமரபுச் சொற்களை எழுதுக**

1  ______________________

2  ______________________

3  ______________________

4  ______________________

5  ______________________

6  ______________________

ஊ. **வினாக்களுக்கு விடையளிக்க**

1. மரபு என்றால் என்ன?
2. பாடப்பகுதியில் எத்தனை வகையான மரபுச் சொற்கள் இ
3. ஒலி மரபிற்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

## மொழியை ஆள்வோம்

அ. **கேட்டல்**

- எளிய, இனிய ஓசைநயம் மிக்க தமிழ்ப்பாடல்களைக் கேட்டு மகி
- தொலைக்காட்சி, வானொலி, பள்ளி விழாக்கள், ஊர்த்திருவிழா நிகழும் பட்டிமன்றம், கவியரங்கம் ஆகியவற்றைக் கேட்டு மகி

## ஆ. பேசுதல்

- உமக்குப் படித்த தலைப்புகளில் வகுப்பறைப் பட்டிமன்றத்தில் பங்கேற்றுப் பேசுக.
- உமக்குப் பிடித்த பறவைகளுள் ஏதேனும் ஒன்றுபற்றி ஐந்து மணித்துளி பேசுக.

## இ. படித்தல்

- இனிய, எளிய தமிழ்ப்பாடல்களைப் படித்து மகிழ்க.
- சிறுவர் இதழ்களில் இடம்பெற்றுள்ள விலங்கைப் பற்றிய கதைகளுள் ஏதேனும் ஒன்றைப் படித்துக்காட்டுக.

## ஈ. எழுதுதல்

### 1 சொல்லக்கேட்டு எழுதுக.

| | | |
|---|---|---|
| குளிரிள நீர் | யானை பிளிறும் | பனிமலர் |
| நற்பண்பு | திருவள்ளுவர் | பறைசாற்றுதல் |
| ஞாயிற்றுக்கிழமை | இறக்கைகள் | சீறியது |
| கொக்கரக்கோ | | |

### 2 சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. நல்லறிவு – ______________________
2. தென்னைமரம் – ______________________
3. கவியரங்கம் – ______________________
4. நன்றி – ______________________

### 3 கீழ்க்காணும் சொற்றொடர்களைப் படித்து வினாக்களுக்கு விடையெழுதுக.

| | | |
|---|---|---|
| மேரி ஆடினாள் | ஈ பறந்தது | புலி உறுமியது |
| பாட்டி தும்மினார் | குழந்தை சிரித்தது | பூனை தூங்கியது |

1. குழந்தை என்ன செய்தது? ______________________
2. மேரி என்ன செய்தாள்? ______________________
3. பாட்டி என்ன செய்தார்? ______________________
4. எது பறந்தது? ______________________
5. தூங்கியது எது? ______________________
6. புலி என்ன செய்தது? ______________________

4. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொரு
தமிழ் காலத்தால் முந்தையது மட்டுமன்று; உலகின்
வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த பெருமை நம் தமி
தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி
தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. யாதும் ஊரே யா
உயரிய தத்துவத்தை உலகுக்கு உணர்த்தியது, நம் தமி
வியந்து பார்க்கும் வளமான சொற்கள் உடையது நம்

1. தமிழ் என்னும் சொல்லின் பொருள் யாது?
2. உறவினர் என்னும் பொருள் தரும் சொல்லை பத்தியி
3. தமிழ்மொழியில் என்னென்ன இலக்கணப் பிரிவுகள்
4. தமிழ்ப் பண்பாடு உலகுக்கு உணர்த்திய உயரிய தத்
5. பிரித்து எழுதுக. தமிழிலக்கணம் – ____________

5 எடுத்துக்காட்டில் உள்ளதுபோல் மாற்றி எழுதுக.

எ.கா.

1. ஹேண்ட்ரைட்டிங் காம்பிடிசன்ல எனக்குப் ஃபர்ஸ்ட்
   கையெழுத்துப் போட்டியில் எனக்கு முதற்பரிசு கிடை
2. ஃபஸ்ட் பீரியட் தமிழ் கிளாஸ் நடந்தது
   ____________________
3. நான் ட்ராயிங் நோட்டில் உள்ள பிச்சர்க்கு கலர் கொடு
   ____________________

6. பொருத்தமான சொற்களால் பாடலை நிறைவு செய்க.
(உண்மை, பயிற்சி, பொறுமை, கல்லாமை, ஊக்கம், கல்

| | |
|---|---|
| ________ உடையவன் மாணவன் | ________ அ |
| ________ கற்பவன் மாணவன் | ________ தவிர் |
| ________ பெறுபவன் மாணவன் | ________ செய |
| ________ பேசுபவன் மாணவன் | ________ கொ |

## மொழியோடு விளையாடு

**1. பாரதிதாசனின் பாடலில் வரும் வருணனைச்சொற்களை எடுத்து எழுதுக**




P281M8

**2. கீழ்வரும் குறுக்கெழுத்து புதிரில் உள்ள வினாக்களுக்குச் சிந்தித்துச் சரியான விடையைக் கண்டுபிடி.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 நா | 1 க | | | | 2 பா | | |
| | | | | | | | | |
| | | | 2 த | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | 3 இ | | | | | 3 பா |
| 2 பா | 1 இ | | | | | | 1 தொ | |

### கீழிருந்து மேல்

1. தமிழ் மொழியின் முதல் இலக்கண நூல் ____________________
2. பாரதிதாசன் இவர் மேல் பற்று வைத்திருந்தார் ________________
3. புதுவையில் தோன்றிய புதுமைப் பாவலர் ____________________

## மேலிருந்து கீழ்

1. பாரதிதாசனின் தந்தையின் பெயர் ____________________
2. பாரதியார் எழுதிய பாடலில் ஒன்று ____________________
3. முத்தமிழ் என்பது இயல், இசை ____________________

## இடமிருந்து வலம்

1. உடலுக்கு குளிர்ச்சி தருவது ____________________
2. உலகின் முதன் மொழி மூத்த மொழி ____________________
3. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பொருள் ____________________

## 3. குறிப்புகளைக் கொண்டு விடைகளைக் கண்

1. உருண்டோடும் பெரிய தேரைக் காப்பது அதன் சிறிய ____

| | | | |
|---|---|---|---|
| | ச் | | ணி |

2. இரும்பை இழுக்கும் சக்தி கொண்டது .

| | | | |
|---|---|---|---|
| கா | | | ம் |

3. அம்மா – வேறு சொல்.

| | | |
|---|---|---|
| | ன் | |

4. ஆத்திசூடி எழுதிய பெண்பாற் புலவர்.

| | | | |
|---|---|---|---|
| ஔ | | | ர் |

5. எதிர்ச் சொல் தருக. மேடு

| | | | |
|---|---|---|---|
| | ள் | | |

6. காகம் தனக்குக் கிடைத்த உணவைப் பிற காகங்களோ உண்ணும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | கி | | ந் | |

7. உன் விடைகளின் மூன்றாவது எழுத்துகளை வரிசைப் எதிர்காலத்தில் நீ யாராக இருப்பாய் எனத் தெரியும். ____

(காந்தம், அன்னை, பள்ளம், அச்சாணி, பகிர்ந்து, ஔவை

4. சொல்லிலிருந்து புதிய சொல் உருவாக்குக.

எ.கா.

காஞ்சிபுரம் – கா, காஞ்சி, புரம், காசி, காரம், சிரம்

1. புதுக்கவிதை 2. நெல்லிக்கனி 3. கற்குவியல்

5. சொற்களைக் கொண்டு புதிய தொடர்களை உருவாக்குக.

| | | | | |
|---|---|---|---|---|
| அக்கா | படித்தாள் | நான் | பாடம் | வீட்டிற்கு |
| சென்றாள் | படித்தேன் | சென்றேன் | வந்தாள் | பள்ளிக்கு |

1. ______________ ______________ ______________
2. ______________ ______________ ______________
3. ______________ ______________ ______________
4. ______________ ______________ ______________
5. ______________ ______________ ______________

## நிற்க அதற்குத் தக

நான் பிறமொழிக் கலப்பின்றி பேசுவேன்

தாய்மொழியைப் போற்றுவேன்

## அறிந்து கொள்வோம்

**எழுத்துகளை எளிதாக அடையாளம் காண உதவும் பெயர்கள்**

ண – 'டண்ணகரம்'

ந – 'தந்நகரம்'

ன – 'றன்னகரம்'

ர – இடையின 'ரகரம்'

ற – வல்லின 'றகரம்'

ல – மேல்நோக்கு 'லகரம்'

ள – பொது 'ளகரம்'

ழ – சிறப்பு 'ழகரம்'

# HOLY TRINITY INTERNATIONAL SCHOOL

Melpalai, Edaicode Post, K.K. District.

GRADE –V

TAMIL

இயல்-1.1

இன்பத்தமிழ்

கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் விடைகளை நன்றாகப் படித்து எழுதி பழகுக.

1. பொருள் தருக
   1. கனி – பழம்
   2. நனி – மிகுதி
   3. கழை – கரும்பு
   4. நல்கிய – கொடுத்த

II. பிரித்து எழுதுக:
   1. கழையிடை – கழை+ இடை
   2. என்னுயிர் – என+உயிர்
   3. கனியிடை – கனி+ இடை

III. சேர்த்து எழுதுக:
   1. பனி+ மலர் – பனிமலர்
   2. இனிமை+ ஆனது – இனிமையானது.

IV. விடை எழுதுக:
   1. பாரதிதாசன் எவற்றையெல்லாம் இனியது என்று கூறுகிறார்?

      கனியின் சுளையும் முற்றிய கரும்புச்சாற்றின் சுவையும் மலரிலிருந்து எடுக்கப்பட்ட தேனின் சுவையும் காய்ச்சிய பாலின் சுவையும் பசு தந்த பாலின் சுவையும் தென்னை மரத்திலிருந்து எடுக்கப்பட்ட குளிர்ந்த இளநீரின் சுவையும் இனிமையானது.
   2. பாரதிதாசன் எதனை என்உயிர் என்று கூறுகிறார்?

      பாரதிதாசன் தமிழே என்உயிர் என்று கூறுகிறார்.
   3. பாரதிதாசன்-குறிப்பு வரைக?

      பாரதிதாசன் புதுச்சேரியில் பிறந்தார். பாரதியார் மீது கொண்ட பற்றினால் கனக சுப்பு ரத்தினம் என்ற தன் பெயரை பாரதிதாசன் என்று மாற்றிக்கொண்டார்.இவர் பாடிய பாடல் பாரதிதாசன் கவிதைகள் என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

---

1.2கவிதைப்பட்டிமன்றம்

1. பொருள்தருக:
   1. பண்பு - குணம்
   2. சால - மிக
   3. முத்தமிழ் - மூன்று தமிழ்
   4. செப்பிட - கூறிட
   5. பா - பாட்டு

6. அகிலம் - உலகம்

2. **எதிர்ச்சொல் தருக**

1. நல்லவன் × கெட்டவன்
2. நற்பண்பு × தீயப்பண்பு
3. வெளிச்சம் × இருள்
4. புகழ் × இகழ்

3. **பிரித்து எழுதுக:**

1. நற்றமிழ் - நன்மை+ தமிழ்
2. செந்தமிழ் - செம்மை+ தமிழ்
3. கவியரங்கம் - கவி+ அரங்கம்
4. நன்னெறி - நன்மை+ நெறி

4. **சேர்த்து எழுதுக:**

1. அறிவு+ ஆயுதம் - அறிவாயுதம்
2. அகிலம்+ எல்லாம் - அகிலமெல்லாம்
3. கவிதை+எல்லாம் - கவிதையெல்லாம்

5. **விடை எழுதுக**

1. அறிவால் உயர்ந்தவர்களாக இன்சுவை யார் யாரை குறிப்படுகிறார்?

அப்துல்கலாம், தாமஸ் ஆல்வா எடிசன், போன்றோர் அறிவால் உயர்ந்தவர் என்று இன்சுவை கூறினார்.

2. பண்பால் சிறந்தவர்களாக மதியொளி எவரையெல்லாம் குறிப்பிடுகிறார்?

அதியமான், புத்தர், வள்ளுவர், அன்னை தெரசா போன்றோர் பண்பால் உயர்ர்தவர்கள் என்று மதியொளி கூறுகிறார்.

3. உயிர் காக்கும் நெல்லிக்கனியை யார் யாருக்கு கொடுத்தார்?

உயிர் காக்கும் நெல்லிக்கனியை அதியமான் ஔவைக்குக் கொடுத்தார்.

4. நடுவர் கூறிய தீர்ப்பு யாது?

கண்களுக்கு இரு விழிகள் எவ்வாறு முக்கியமோ அதுபோல வாழ்க்கைக்கு அறிவும் பண்பும் முக்கியமாகும்.

5. ஐம்பொறிகள் யாவை?

கண், காது ,மூக்கு, நாக்கு, மெய்.

6. தமிழை சிறப்பிக்கும் பெயர்கள் யாவை?

செந்தமிழ், முத்தமிழ், பைந்தமிழ், தேன்தமிழ்.

7. கல்வி, செல்வம் வீரம் இவற்றில் எது சிறந்தது? ஏன்?

கல்வி, செல்வம், வீரம் இவற்றில் கல்வியே சிறந்தது. ஏனென்றால் செல்வத்தாலும் வீரத்தாலும் செய்ய முடியாத செயலை கல்வி அறிவினால் எளிதில் செய்து முடிக்கலாம்.

## 1.3.என்ன சத்தம்

1. **பொருள் தருக:**

1. ஓசை - சத்தம்
2. பருகுதல் - அருந்துதல்
3. செவி - காது
4. அச்சம் - பயம்
5. துணிவு - துணிச்சல்

**2. விடை எழுதுக:**

1. செழியன் ஆடுகளைக் காட்டிற்கு ஓட்டிச்செல்ல காரணம் என்ன?

   விடுமுறை என்பதால் செழியன் ஆடுகளைக் காட்டிற்கு ஓட்டிச்சென்றான்.

**3. விரிவான விடையளி:**

1. என்னச்சத்தம் கதையை சுருக்கமாக எழுதுக?

பள்ளி விடுமுறை என்பதால் செழியன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு காட்டிற்குச் சென்றான்.செழியன் ஆடுகளை ஓரமாக மேயவிட்டான். பின்னர் ஒரு மரத்தடியில் அமர்ந்து ஓய்வெடுத்தான்.மரத்தின் மேலிருந்து குரங்குகள் எழுப்பும் அலப்பறை ஓசை செழியனுக்கு எரிச்சலை உண்டாக்கியது.பின்னர் மலத்தில் அணில்கள் ஓடி பிடித்து விளையாடின. குயில்கள் கூவும் ஓசை செழியனுக்கு இனிமையாக இருந்தது.

திடீரென ஆடுகள் கத்தும் சத்தம் கேட்கவே செழியன் பதறியடித்து எழுந்தான்.அருகில் ஒரு புதருக்கிடையே ஒரு நரி ஆடுகளை கொன்று தின்றன.உடனே ஒரு குச்சியை வளைத்து வில்லாக்கி நரியை நோக்கி அம்பு எய்தான்.அம்பு பட்டு காயமடைந்த நரி அங்கிருந்து ஓடியது.

உடனே செழியன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு வீட்டிற்கு திரும்பினான்.வரும் வழியில் சிங்கம்முழங்கும் சத்தம் பறவைகள் இறக்கைகளை படபடவென அடிக்கும் ஓசை கேட்டான். மேலும் யானை பிளிறும் ஓசை ஆந்தை அலறும் சத்தம் மயில் அகவும் ஓசை போன்ற ஒலிகளை கேட்டான்.செழியன் பயந்தவாறே வீட்டிற்கு வந்து சேர்ந்தான். பின்னர் தான் வழியில் கண்ட காட்சிகளை தன் பாட்டியுடனும் அம்மாவுடனும் பகிர்ந்துக்கொண்டான். பின்னர் தான் கண்ட காட்சிகளை தன் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக மகிழ்ச்சியுடன் பள்ளிக்கு புறப்பட்டுச் சென்றான்.

## 1.4மரபுச் சொற்கள்

**2. விடை எழுதுக:**

1. மரபு என்றால் என்ன?

   நம் முன்னோர்கள் எப்பொருளை எச்சொல்லால் எவ்வாறு வழங்கினார்களோ அப்பொருளை அச்சொல்வால் அவ்வாறு அழைப்பது மரபு ஆகும்.

2. விலங்கு பறவை இவைகளின் ஒலி மரபுகளை எழுதுக?

   குரங்கு அலப்பும்
   குயில் கூவும்
   ஆடு கத்தும்
   சிங்கம் கர்ச்சிக்கும்\ முழங்கும்
   நாய் குரைக்கும்
   புலி உறுமும்
   யுானை பிளிறும்
   ஆந்தை அலறும்
   மயில் அகவும்
   பாம்பு சீறும்.

3. விலங்குகளின் இளமைப்பெயர்கள் யாவை?

ஆட்டுக்குட்டி, கோழிக்குஞ்சு, குதிரைக்குட்டி, குரங்குக்குட்டி, மான் கன்று, யானைக்கன்று, சிங்கக்குருளை ,புலிப்பறள், கீரிப்பிள்ளை, அணிற்பிள்ளை.

4. வினை மரபுச் சொற்களை எழுமுக?

அம்பு எய்தார், சோறு உண்டான்,ஆடை நெய்தான் ,கூடை முடைந்தான்,பூ பறித்தான், மாத்திரை விழுங்கினான், நீர் குடித்தான், பால் பருகினான், முறுக்கு தின்றான், சுவர் எழுப்பினார்.

5. தாவரங்களின் உறுப்புப் பெயர்களை எழுதுக?

| | | |
|---|---|---|
| மாஇ பலாஇ வாழை | – | இலை |
| ஈச்சம்இ தென்னைஇ பனை | – | ஓலை |
| கம்புஇ கேழ்வரகுஇ சோளம் | – | தட்டை |
| நெல்இ புல்இ தினை | – | தாள் |
| அவரைஇ கத்தரி இமுருங்கைஇ வெள்ளரி | – | பிஞ்சு |

6. பூச்சிகள்இ பறவைகள்இ விலங்குகளஇ இவற்றின் இருப்பிட மரபுச்சொற்கள் யாவை?

கரையான் புற்று இஆட்டுப்பட்டிஇ குதிரைக்கொட்டில்இ குருவிக்கூடுஇ எலி வளைஇ யானைக்கூட்டம்இ மாட்டுத்தொழுவம்இ கோழிப்பண்ணைஇ சிலந்தி வலைஇ நண்டு வளை.

7. **சரியானச் சொல்லை தெரிவு செய்து எழுதுக:**

1. நம் முன்னோர்கள் ஒரு சொல்லை சொல்லியவாறே நாமும் சொல்வது--------- (மரபு)

   அ)பழைமை ஆ)புதுமை இ)மரபு

2. யானை--------------------(பிளிறும்)

   அ)கத்தும் ஆ)பிளிறும் இ)அலறும்

3. ஆந்தை அலறும் என்பது---------------(ஒலி மரபு)

   அ)ஒலி மரபு ஆ)வினை மரபு இ)இளமைப்பெயர் மரபு

4. புலியின் இளமைப்பெயர்------------------(புலிப்பறள்)

   அ)புலிக்கன்று ஆ)புலிக்குட்டி இ)புலிப்பறள்

5. பூப்பறித்தாள் என்பது------------------(வினை மரபு)

   அ)வினை மரபு ஆ)பெயர் மரபு இ)ஒலி மரபு

8. **பொருத்துக:**

1. சிங்கம் - கூவும் 4
2. அணில் - அலப்பும்5
3. மயில் - முழங்கும்1
4. குயில் - கீச்சிடும்2
5. குரங்கு - அகவும்3

9. **வினை மரபுகளை பொருத்துக:**

1. நீர் - பறித்தாள் 5
2. முறுக்கு - எய்தான் 4
3. உணவு - குடித்தான் 1
4. அம்பு - தின்றான் 2
5. பூ - உண்டான் 3